**பெண் :** மணியோசை கேட்டு எழுந்து
நெஞ்சில் ஆசை கோடி சுமந்து
திருத்தேரில் நானும் அமர்ந்து
ஒரு கோயில் சேர்ந்த பொழுது
அந்தக் கோவிலின் மணி வாசலை
இங்கு மூடுதல் முறையோ......ஹ்ம்......ஹ்ம்ம்....

**பெண் :** மணியோசை கேட்டு எழுந்து
நெஞ்சில் ஆசை கோடி சுமந்து

**ஆண் :** கண்ணன் பாடும் பாடல் கேட்க ஆஅ
ராதை வந்தால் ஆகாதோ
ராதையோடு ஆசைக் கண்ணன்...ஹா...ஆ....
பேசக் கூடாதோ.....

**பெண் :** கண்ணன் பாடும் பாடல் கேட்க
ராதை வந்தால் ஆகாதோ
ராதையோடு ஆசைக் கண்ணன்
பேசக் கூடாதோ

**ஆண் :** ராதை மனம் ஏங்கலாமோ
கண்ணன் மனம் வாடலாமோ
வாழ்க்கை மாறுமோ நெஞ்சம் தாங்குமோ

**ஆண் :** மணியோசை கேட்டு எழுந்து
நெஞ்சில் ஆசை கோடி சுமந்து

**ஆண் :** பாதை மாறிப் போகும் போது......
ஊரு வந்தே சேராது
தாளம் மாறிப் போடும் போது ஆ.....
ராகம் தோன்றாது

**பெண் :** பாதை மாறிப் போகும்போது
ஊரு வந்தே சேராது

**ஆண் :** தாளம் மாறிப் போடும்போது
ராகம் தோன்றாது

**பெண் :** பாடும் புது வீணை இங்கே

**ஆண் :** ராகம் அதில் மாறும் அங்கே
காலம் மாறுமோ தாளம் சேருமோ

**பெண் :** ஓஹோ……ஓ….. மணியோசை கேட்டு எழுந்து
**ஆண் :** நெஞ்சில் ஆசை கோடி சுமந்து
**பெண் :** திருத்தேரில் நானும் அமர்ந்து….
**ஆண் :** ஒரு கோயில் சேர்ந்த பொழுது…..
**பெண் :** அந்தக் கோவிலின் மணி வாசலை
இங்கு மூடுதல் முறையோ…..

**ஆண் :** ஹம் ஹ்ம்ம் ஹம்….
மணியோசை கேட்டு எழுந்து
நெஞ்சில் ஆசை கோடி சுமந்து